People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org
Web: www.pwtn.org

30.4.2011

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்
அண்ணாசாலை
சென்னை 60002

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கம்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 15 ஆண்டுகளாக, தமிழக அளவிலும், 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும், மனித உரிமைக் காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 23.4.2011 முதல் 30.4.2011 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

**23-4-2011 முதல் 30-4-2011 முடிய இவ்வாரத்தில் எங்கள் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகள்**

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | 1 |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | 2 |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 31 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 15 |
| 5. | வகுப்பறை வன்முறை | 1 |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | 6 |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 6 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | – |
| 9. | கொத்தடிமை | 1 |
| 10. | பெண் சிசு கொலை | 1 |
| 11. | குழந்தை திருமணம் | 1 |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 6 |
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | – |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | 1 |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | – |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | 4 |
| 17. | மணல் கொள்ளை | 3 |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | – |
| 19. | பழங்குடியினர் மீதான வன்முறை | – |

| | | |
|---|---|---|
| 20. | முதியவர்கள் மீதான வன்முறை | – |
| 21. | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | 1 |
| 22. | பொதுவானவை | 5 |
| | மொத்தம் | 84 |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நன்றி,

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

**(ஹென்றி டிபேன்)**
நிர்வாக இயக்குநர்

**நகல்கள்:**

தமிழகத் துணை முதல்வர்

தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்

தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்

அனைத்து மனித உரிமை ஆணையங்கள்

அனைத்து அரசியல் கட்சிகள்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு-17
## 23.4.2011 முதல் 30.4.2011 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 1080. | 23.4.2011 | **திருச்சி மாவட்டம்:** திடிருச்சி எடமலைப்பட்டி புதூர் சினிவாச நகரைச் சேர்ந்த ஜெயபால் மகன் வேல்முருகன்(26) மனைவி சிவகாமசுந்தரி. கணவன் மனைவி குடும்ப தகராறில் இருவரும் பிரிந்து வாழ்ந்தனர். ஆத்திரமடைந்த வேல்முருகன் தனது மனைவியின் நிர்வாணபடத்தை இன்டெர்நெட்டில் வெளியிட்டதாகவும் அதற்கு உடந்தையாக அவரது தாய் இருந்ததற்காக இருவரும் கைது. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |
| 1081. | 23.4.2011 | **சேலம் மாவட்டம்:** சேலம், வாய்க்கால்பட்டறையைச் சேர்ந்த தமிழ்ச்செல்வன் வீட்டில், முரளி என்பவர் குடியிருந்து வருகிறார். முரளி இராமநாதபுரம் பகுதியைச் சேர்ந்த வீரபெருமாள் மனைவி சுதாவை தன் வீட்டில் பத்து நாட்களாக அடைத்து வைத்ததோடு கொலை மிரட்டல் விடுத்ததாக சுதா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 1082. | 23.4.2011 | **விழுப்புரம் மாவட்டம்:** சங்கராபுரம் அடுத்த தியாகராஜபுரம் பஜனை கோவில் தெருவைச் சேர்ந்த கோவிந்தன்(35) மகன் சஞ்சீவி(3). கணவன் மனைவி குடும்பத் தகராறில் ஆத்திடைந்த கோவிந்தன் குழந்தை சஞ்சீவியை சுவற்றில் அடித்துக் கொலை செய்ததாக புகார். | குழந்தைகள் மீதான வன்முறை & கொலை | தினமலர் |
| 1083. | 23.4.2011 | **திருச்சி மாவட்டம்:** திருவெறும்பூர் அருகே உள்ள கீழகுமரேசபுரத்தைச் சேர்ந்த கணேசன் மகள் தீபா(25) சுப்ரமணியன் மகள் அபிராமி(22) கல்லூரியில் பிபிஏ படித்து வருகிறார். பெல் டபுன்சிப் பகுதியைச் சேர்ந்த இளவரசி. நேரு ஸ்டேடியம் அருகே நடந்து வரும்போது மூவரையும் அதே பகுதியைச் சேர்ந்த விக்னேஷ்குமார்(22) விக்னேஷ்(21) இருவரும் பெண்களிடம் சில்மிஷம் செய்ததாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 1084. | 23.4.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் அருகேயுள்ள வாகைகுளத்தைச் சேர்ந்த பாண்டி மகள் சித்ரா(17). சோழவந்தான் பகுதியைச் சேர்ந்த காசி, இவரது உறவினர் இன்பவள்ளி, அவரது மருமகன்கள் மோகன், ஜெயராஜ் ஆகியோர் சித்ராவை கடத்தியதாக பாண்டி புகார். | குழந்தைகள் மீதான வன்முறை & கடத்தல் | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| 1085. | 23.4.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகேயுள்ள நடுப்பட்டியைச் சேர்ந்த மாணிக்கம் மனைவி அங்கம்மாள்(27) மாற்றுத்திறனாளி. இவரை அதே பகுதியைச் சேர்ந்த சிலம்பரசன்(23) பாலியல் பலாத்கராம் செய்ய முயற்சி. அங்கம்மாள் சிலம்பரசன் மீது புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை & மாற்றுத்திறனாளிகள் மீதான வன்முறை | தினகரன் |
| 1086. | 23.4.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** கருங்கல் அருகே உள்ள மாங்கரையில் நிதி நிறுவனம் நடத்திவருபவர் பெர்னார்டு ஜோசப்(51). இவரது சகோதரி கிளாடிஸ் பெர்னார்டு ஜோசப் நடத்திவரும் நிதி நிறுவனத்தில் ரூ.19 லட்சம் மோசடி செய்ததாக அண்ணன் மீது புகார். இந்த வழக்கில் இருந்து விடுவிக்க இன்ஸ்பெக்டர் பாலசிங்கம் பெர்னார்டு ஜோசப்பிடம் ரூபாய் 50 ஆயிரம் லஞ்சம் கேட்டதாக புகார். | லஞ்சம் | தினகரன் |
| 1087. | 23.4.2011 | **மதுரை மாவட்டம்:** கோமதிபுரத்தைச் சேர்ந்த அப்துல்ஹக்கீம் மகள் சித்திகா மொபின்(24)னை வண்டியூர் பகுதியைச் சேர்ந்த முருகன் திருமண ஆசை காட்டி நண்பர்களுடன்கடத்திச் சென்றதாக அப்துல்ஹக்கீம் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினத்தந்தி |
| 1088. | 23.4.2011 | **நாமக்கல் மாவட்டம்:** சேந்தமங்கலம் போலீஸ் சரகம் வடக்கு திருமலைகிரியைச் சேர்ந்த சத்தியராஜ்(30) மனைவி அமுதா(32). திருவண்ணாமலையைச் சேர்ந்த கட்டிடமேஸ்திரி இளையராஜா(23) அமுதாவிற்கு செல்போனில் பேசி தொலை கொடுத்ததாக அமுதா புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 1089. | 23.4.2011 | **கன்னியாகுமரி மாவட்டம்:** கன்னியாகுமரி அருகே உள்ள அஞ்சுகிராமம் லெவிஞ்சிபுரத்தைச் சேர்ந்த செல்வராஜ்(60) நெல்லை அடுத்த மேலப்பாளையம் அருகே மேலநத்தத்தில் மருத்துவமனை நடத்தி வருகிறார். அவரது மருத்துவமனையில் வேலை பார்க்கும் பெண்ணிடம் சில்மிஷம் செய்தாக செல்வராஜ் மீது புகார். செல்வராஜ் கைது. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினத்தந்தி |
| 1090. | 24.4.2011 | **மதுரை மாவட்டம்:** உறங்கான்பட்டியைச் சேர்ந்த கருப்பையா மகள் ராதிகா(17). மாமா பாலுச்சாமி(27) தனது நண்பர்களுடன் ராதிகாவை கடத்திச் செல்ல முயன்றதாக புகார். பாலுச்சாமி மற்றும் நண்பர்கள் கைது. | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 1091. | 24.4.2011 | **வேலூர் மாவட்டம்:** ஜோலார் பேட்டையை அடுத்த ரெட்டியூர் பகுதியைச் சேர்ந்த சங்கர் மகள் காயத்திரி(14) 7ம் வகுப்பு படிக்கும் மாணவி. ஊத்தங்கரை அருகே கல்லாவி பனைமரத்துபட்டி கிராமத்தைச் | குழந்தைத் திருமணம் | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சேர்ந்த சக்திவேல். இருவருக்கும் நடக்க இருந்த திருமணத்தை ஜோலார் பேட்டை காவலர்கள் தடுத்து நிறுத்தினர். | | |
| 1092. | 24.4.2011 | **சேலம் மாவட்டம்:** சேலம் கொண்டலாம்பட்டி அருகே உள்ள ஒரு லாட்ஜில் நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த 4 பெண்களை அடைத்து வைத்து துன்புறுத்துவதாக புகார். 4 பெண்களும் மீட்கப்பட்டனர். லாட்ஜ் மேலாளர் மேச்சேரியைச் சேர்ந்த ராமு(43) பழனிவேல்(28). முத்து(41), விஜயகுமார்(28), கிரி(27) கைது. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினத்தந்தி |
| 1093. | 25.4.2011 | **மதுரை மாவட்டம்:** கே.புதூர் சம்பக்குளம் 1–வது தெருவைச் சேர்ந்த கருப்பசாமி (42) மதுரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில். தல்லாகுளம் காவல் நிலைய இன்ஸ்பெக்டராக பணியாற்றிய ஜஸ்டின் சப்–இன்ஸ்பெக்டர் ஜான் கென்னடி, ரவி, செல்வம், காவலர்கள் பி. ராஜா, எஸ். ராஜா, ரெங்கன் ஆகியோர் **8.8.2006** தனது வீட்டிற்குள் நுழைந்து நகை மற்றும் பணத்தை எடுத்துச்சென்றதோடு தனது மீது பொய் வழக்கு போட்ட காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என மதுரை நீதிமன்றத்தில் மனு தாக்கல். | காவல் நிலையச் சித்தரவதை | தினத்தந்தி |
| 1094. | 25.4.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** திண்டுக்கல் ஜே.எம். 3 மாஜிஸ்திரேட் மணிமேகலை கணவர் கண்ணன்(45). தினமும் கணவர் குடித்துவிட்டு தன்னை துன்புறுத்துவதாக மணிமேகலை புகார். கண்ணன் கைது. | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 1095. | 25.4.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** தூத்துக்குடி பகவந்தனை காவல் நிலைய ஏட்டு செல்வராஜ்(52). விருதுநகரில் பாதுகாப்பு பணிக்கு யூனிபார்மில் கோவில்பட்டி வந்தார். பேருந்துநிலையம் அருகே மதுகுடித்து போதையில் ரகளை செய்ததாக புகார். ஏட்டு செல்வராஜ் கைது. | காவல் நிலையச் சித்தரவதை | தினமலர் |
| 1096. | 26.4.2011 | **புதுச்சேரி மாநிலம்:** புதுவை தர்மபுரியைச் சேர்ந்த கவிதா(16). அதே பகுதியைச் சேர்ந்த சிற்றரசன் மகன் கார்த்தி மற்றும் அவரது நண்பர்கள் முத்துக்குமாரன்(19), அன்பரசன் மூவரும் சேர்ந்த கவிதாவை கடத்தி வாயில் பீரை ஊற்றி கற்பழித்தோடு செல்போனில் படம் எடுத்து மிரட்டுவதாக மூவர் மீது கவிதாவின் பெற்றோர் புகார். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தினத்தந்தி |
| 1097. | 26.4.2011 | **மதுரை மாவட்டம்:** விராட்டிபத்தில் உள்ள இருளாண்டி தேவர்காலனி பகுதியில் | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வசிக்கும் குணசேகரன் மனைவி லதா. கம்யூட்டர் சென்டரில் வேலை செய்த லதாவை காணவில்லை என புகார். விராட்டிபத்து சோதனைச் சாவடி அருகே கை, கால்களை வெட்டி, டிரங்கு பெட்டிக்குள் அடைத்த நிலையில் லதாவின் சடலம் இருந்ததாக புகார். லதா கொலை. காவலர்கள் விசாரணை. | & கொலை | |
| 1098. | 26.4.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** ஒசூரில் உள் ஏரியில் 30 வயது மதிக்கத்தக்க பெண்ணின் சடலம் சிதைந்த நிலையில் கிடந்ததாக பொதுமக்கள் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 1099. | 26.4.2011 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் வாணியம்பாடி, ஆம்பூர் இடையே பாலாற்றில் நள்ளிரவில் அதிகாரிகள் துணையுடன் மணல் கொள்ளை நடைபெறுவதாக பொதுமக்கள் புகார். | மணல் கொள்ளை | தீக்கதிர் |
| 1100. | 26.4.2011 | **மதுரை மாவட்டம்:** மேலவளவு அருகே பேருந்தில் இருந்து இறங்கிய இளம் பெண்ணை அதே பகுதியைச் சேர்ந்த திருமலை(19) அழகர் (25) கேலி செய்ததை காவலர் ராஜா, மணிகண்டன் இருவரும் தட்டிக் கேட்டனர். காவலர்களிடம் இளைஞர்கள் தகராறு செய்ததோடு பணி செய்யவிடாமல் தடுத்ததாக இருவர் மீது காவலர்கள் புகார். | பெண்கள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்தரவதை | தினகரன் |
| 1101. | 26.4.2011 | **மதுரை மாவட்டம்:** தெற்குவாசல் பிள்ளையார்பாளையம் ரோட்டில் உள்ள ஆறுமுகத்திற்கு சொந்தமான ஆலையில் இருந்து 20 மூடை ரேசன் அரிசி அதிகாரிகளால் பறிமுதல். மகேஸ்வரன்(47), ரெங்கன்(54), ஜாகீர்உசேன்(19) மூவரும் கைது. மில் உரிமையாளர் ஆறுமுகத்தை காவலர்கள் தேடி வருகின்றனர். | ரேசன் அரிசி கடத்தல் | தினகரன் |
| 1102. | 27.4.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** பழனி தாலுகா, புதூர் கிராமத்தில் வசிக்கும் தலித் சமூகத்தைச் சேர்ந்த காளியப்பன் வேலாயுதம். தங்களது கிராமத்தில் உள்ள டீ கடைகளில் இன்னும் இரட்டை டம்ளர் முறை கடைப்பிடிக்கப்படுவதாக மாவட்ட ஆட்சியரிடம் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | Express |
| 1103. | 27.4.2011 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி வட்டம், நதிக்குடியில் ஜெய்சங்கர் என்பவருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் ஏற்பட்ட தீ விபத்தில் இருளாண்டி(32), செல்லத்துரை(35) இருவர் மரணம். | பட்டாசு ஆலை விபத்து | தினமணி |

| | | | | |
|---|---|---|---|---|
| 1104. | 27.4.2011 | **ஈரோடு மாவட்டம்:** சேலம் மேட்டூர் பகுதியைச் சேர்ந்த தாமரைச் செல்வனை காவலர்கள் விசாரணைக்கு அழைத்துச் சென்று அடித்துக் கொலை. | காவல் நிலைய மரணம். | தமிழ்சுடர் |
| 1105. | 27.4.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** வெள்ளை கவுண்டனூரைச் சேர்ந்த மணி(47) மனைவி உமாமகேஸ்வரி(27). மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்ட மணி உமாமகேஸ்வரி மீது மண்ணெண்ணெய் ஊற்றி கொலை செய்ய முயன்றதாக உமா புகார். மணி கைது. | பெண்கள் மீதான வன்முறை & கொலை முயற்சி | தமிழ்சுடர் |
| 1106. | 27.4.2011 | **மதுரை மாவட்டம்:** கூடக்கோவில் ஆங்குளத்தைச் சேர்ந்த காரணத்தேவர் மகள் ரமா(17). தனது உறவினருடன் இருசக்கர வாகனத்தில் சென்ற ரமாவை எழு பேர் கொண்ட கும்பல், கடத்திச் சென்றதாக புகார். விசாரணையில் காரியாபட்டியைச் சேர்ந்த வேடன் கைது. | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1107. | 27.4.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** இராமநாதபுரம் அருகே வலாந்தரவை கிராமத்தில் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்த இளைஞர்களை கேணிக்கரை காவல் நிலைய ஆய்வாளர் பாண்டியன் திட்டியதோடு கிரிக்கெட் மட்டைகளை உடைத்து சேதப்படுத்தியதோடு, அநாகரிகமாக நடந்ததாக இளைஞர்கள், ஆய்வாளர் பாண்டியன் மீது புகார். | காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |
| 1108. | 27.4.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** சூளகிரி அடுத்த பெத்தசிகரலப்பள்ளி அரசு துவக்கப் பள்ளி ஆசிரியை பாண்டிச்செல்வி(25). கூடுதல் துவக்கக் கல்வி அலுவலர் அரிகேசவராவ் பாலியல் ரீதியான சித்திரவதை. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |
| 1109. | 27.4.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** மத்தூர் அருகேயுள்ள செட்டியப்பன் நகரைச் சேர்ந்த சரவணன்(32) மனைவி பூர்ணிமா. பூர்ணிமாவின் தங்கை ரூபினி(25). தன்னை இரண்டாம் திருமணம் செய்ய மறுத்த ரூபினியை வெட்டிக் கொலை செய்ததாக சரவணன் கைது. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினத்தந்தி |
| 1110. | 27.4.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** விளாத்திகுளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு காவலர்கள் நடத்திய சோதனையின் 25 ஆயிரத்து 450 ரூபாய் பறிமுதல். | லஞ்சம் | தினத்தந்தி |
| 1111. | 27.4.2011 | **கோவை மாவட்டம்:** கோவை சிறையில் உள்ள கைதி கபாலி(38) மற்றொரு கைதி பாலாஜி. இரு கைதிகள் இடையே ஏற்பட்ட பணத்தகராறில் ஏற்பட்ட மோதலில் | சிறைச்சாலை வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 3 பேர் காயம். | | |
| 1112. | 27.4.2011 | **வேலூர் மாவட்டம்:** திருப்பத்தூர் தாலுகா, கோம்பை கிராமத்தைச் சேர்ந்த ரெங்கநாதன், பத்மநாதன் மீது செங்கம் காவல் நிலையத்தினர் பொய் வழக்கு பதிவு செய்து சித்திரவதை. | காவல் நிலைய சித்திரவதை | பாஸ்கர் |
| 1113. | 28.4.2011 | **சிவகங்கை மாவட்டம்:** தேவகோட்டை சீனிவாசா நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் நாகரத்திரனம்(44). குடிபோதையில் பள்ளிக்கு வந்து தேர்வு எழுதிய மாணவர்களுடன் தகராறு செய்ததாக தொடக்கக் கல்வி அலுவலர் பரிமளத்திடம் ஆசிரியர்கள் புகார். நாகரத்தினம் கைது. | வகுப்பறை வன்முறை | தினமலர் |
| 1114. | 28.4.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் பாரதியார்புரத்தைச் சேர்ந்த ராஜபாண்டியன்(46) மனைவி குணவதி(41). பெரிய சூரக்குண்டைச்சேர்ந்த ஒரு இளைஞர் தனது மனைவியை 10 பவுன் நகை மற்றும் 50 ஆயிரம் பணத்துடன் கடத்திச் சென்றதாக ராஜபாண்டியன் புகார். காவலர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என மதுரை நீதிமன்றத்தில் புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 1115. | 28.4.2011 | **மதுரை மாவட்டம்:** வண்டியூரைச் சேர்ந்த முருகன் மகள் சந்தியா(17). தனது மகளை எதிர் வீட்டைச் சேர்ந்த செல்வம்(26) கடத்திச் சென்றதாக முருகன் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினகரன் |
| 1116. | 28.4.2011 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** கிருஷ்ணகிரியில் இருந்து சேலத்திற்கு மருத்துவக்கல்லூரி மாணவிகள் 3 பேர் இரவு அரசு பேருந்தில் வந்துக் கொண்டிருந்த போது மப்டியில் இருந்த காவலர் ஒரு மாணவியிடம் சில்மிஷம் செய்ததால் ஆத்திரமடைந்த மாணவி, காவலரை செருப்பால் அடித்ததால் இருவருக்கும் வாக்குவாதம். காவலரை தர்மபுரி புறக்காவல் நிலையத்தில் பொதுமக்கள் ஒப்படைத்தனர். | பெண்கள் மீதான வன்முறை & காவல் நிலைய சித்திரவதை | தினகரன் |
| 1117. | 28.4.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை சிந்தாமணி ரோட்டில் உள்ள அரிசி ஆலை அருகே வேனில் கடத்தப்பட்ட 57 ரேசன் நெல் மூட்டைகள் வாகனை சோதனையில் ஈடுபட்ட அதிகாரிகளால் பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | தினமணி |
| 1118. | 28.4.2011 | **வேலூர் மாவட்டம்:** வாணியம்பாடி சென்னப்பேட்டை பகுதியில் வாகனச் சோதனையில் ஆட்சியார் ஈடுபட்ட போது அவ்வழியாக வந்த லாரி நிற்காமல் சென்றது. விரட்டிப்பிடித்து லாரியில் இருந்த 5டன் ரேசன் அரிசி பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 1119. | 28.4.2011 | **மதுரை மாவட்டம்:** பைக்காரா பகுதியில் ஒர்க்ஷாப் நடத்தி வருபவர் மணிகண்டன். இவர் கடையில் வைத்திருந்த செல்போனைக் காணவில்லை என சுப்ரமணியாபுரம் காவல் நிலையத்தில் புகார். இந்த வழக்கை விசாரித்த சிறப்பு ஆய்வாளர் ஜெயராஜ் ரூ. 1500 லஞ்சம் கேட்டதாக மணிகண்டன் புகார். ஜெயராஜ் கைது. | லஞ்சம் & காவல் நிலையச் சித்திரவதை | தீக்கதிர் |
| 1120. | 28.4.2011 | **சிவகங்கை மாவட்டம்:** இளையான்குடி பேரூராட்சி 3 வது வார்டுக்கு உட்பட்ட சோதுகுடி டாக்டர் அம்பேத்கர் குடியிருப்பு, இங்கு 80 தலித் குடும்பங்கள் வசிக்கின்றன. ஊரே காவிரி குடிநீரை குடித்து வரும் நிலையில், அம்பேத்கர் குடியிருப்புக்கு மட்டும் கலங்கி ஊருணி தண்ணீர்தான் குடிநீராக உள்ளதோடு அடிப்படை வசதிகள் எதுவும் இல்லை என பொதுமக்கள் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 1121. | 28.4.2011 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் அடுத்த வாணியம்பாடி பகுதியைச் சேர்ந்த லட்சுமி(21). அதே பகுதியைச் சேர்ந்த பிரேம்குமார்(30) லட்சுமியை திருமணம் செய்வதாக ஏமாற்றி பாலியல். கர்ப்பமுற்ற லட்சுமியை பிரேம்குமார் திருமணம் செய்ய மறுத்ததோடு கொலை மிரட்டல். பிரேம்குமார் மீது லட்சுமி புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (20.4.11) |
| 1122. | 28.4.2011 | **வேலூர் மாவட்டம்:** ஜோலார்பேட்டை அருகே உள்ள தாமலேரிமுத்தூர் ஜண்டாகாரன் வட்டத்தைச் சேர்ந்த ராஜா மனைவி புனிதா(37). குடும்பத் தகராறில் மனமுடைந்த புனிதா தூக்கிட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (20.4.11) |
| 1123. | 28.4.2011 | **வேலூர் மாவட்டம்:** ஆரணி அடுத்த சதுப்பேரி கிராமத்தைச் சேந்த பாஸ்கர்(30) மனைவி லட்சுமி(23). குடும்பத் தகராறில் மனமுடைந்த லட்சுமி விஷம் குடித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (20.4.11) |
| 1124. | 28.4.2011 | **சென்னை மாவட்டம்:** வியாசர்பாடி எம்கேபி நகரைச் சேர்ந்த குமார்(32) மனைவி திருநங்கை ரம்யா(26). குமார் தினமும் குடித்துவிட்டு வந்து துன்புறுத்தியதால் மனமுடைந்த ரம்யா தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (20.4.11) |
| 1125. | 28.4.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** போளூர் அருகே உள்ள நவாப் பாளையம் கிராமத்தைச் சேர்ந்த பவுன்குமார்(20) மனைவி சீதா(19). இருவரும் பெற்றோர் எதிர்ப்பை மீறி திருமணம் செய்தனர். | பெண்கள் மீதான வன்முறை & தலித்துகள் & | பாஸ்கர் (21.4.11) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணவன் மற்றும் குடும்பத்தார் சாதி பெயரை கூறி தன்னை திட்டியதோடு கொலை மிரட்டல் விடுத்ததாக சீதா புகார். | பெண்கள் மீதான வன்முறை | |
| 1126. | 28.4.2011 | **சென்னை மாவட்டம்:** கே.கே.நகர் 18வது தெருவைச் சேர்ந்த ஜான்சன்(56) மடிப்பாக்கம் காவல் நிலையத்தில் ஏட்டாக பணியாற்றுகிறார். அதே பகுதியைச் சேர்ந்த சிலர் கிரிக்கெட் விளையாடியதில் பந்து ஜான்சனின் வீட்டு ஜன்னல் கண்ணாடியை உடைத்ததால் ஜான்சன் மற்றும் வாலிபர்கள் இடையே தகராறு. ஆத்திரமடைந்த ஜான்சன் மற்றும் அவரது மகன்கள் ராஜாசிங்(27), அகஸ்டின்(26) தாக்கியதாக அருள்ராஜ் புகார். | காவல் நிலையச் சித்திரவதை | பாஸ்கர் (21.4.11) |
| 1127. | 28.4.2011 | **சென்னை மாவட்டம்:** அம்பத்தூர் அடுத்த மேனாம்பேடு கருக்கு மெயின்ரோட்டைச் சேர்ந்த சோலை(28) மனைவி மீனா(22). திருமணமாகி 3 மாதங்களே ஆன நிலையில் மீனா தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (21.4.11) |
| 1128. | 28.4.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** பெரியகுளம் கிராமத்தைச் சேர்ந்த வேலாயுதம் மனைவி சிவகாமி(35). வேலாயுதத்துக்கும், அதேபகுதியைச் சேர்ந்த மற்றொரு பெண்ணுக்கும் ஏற்பட்ட தொடர்பை சிவகாமி தட்டிக்கேட்டதால் ஆத்திரமடைந்த வேலாயுதம் சிவகாமியை தாக்கியதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (22.4.11) |
| 1129. | 28.4.2011 | **வேலூர் மாவட்டம்:** நாட்றம்பள்ளி அருகே மல்லப்பன் மகள் தனலெட்சுமி(28) மகன் செல்வம்(34) அண்ணன் தங்கையிடையே ஏற்பட்ட நிலத்தகராறில் ஆத்திரமடைந்த செல்வம் கட்டையால் தாக்கியதாக செல்வம் மீது தனலெட்சுமி புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (22.4.11) |
| 1130. | 28.4.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** போளூர் அருகே வசூர் ஏரி பகுதியில் தாசில்தார் மற்றும் வருவாய் துறையினர் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். ஏரியில் மண் கடத்திய 8 லாரிகள் உட்பட 10 வாகனங்கள் பறிமுதல். | மணல் கொள்ளை | பாஸ்கர் (22.4.11) |
| 1131. | 28.4.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** செஞ்சி கிராமத்தைச் சேர்ந்த மாரிமுத்து(33) மனைவி சாந்தி(30). கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த சாந்தி தீக்குளித்துத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (22.4.11) |
| 1132. | 28.4.2011 | **சேலம் மாவட்டம்:** கொளத்தூர் அருகே ராஜமங்கலம் தயாளு நகர், 4வது தெருவைச் சேர்ந்த தீனதயாளன் மனைவி மேரி(38). வீட்டில் தனியாக இருந்த மேரியை | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (22.3.11) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தாக்கிவிட்டு மர்ம கும்பல் நகையைப் பறித்துச் சென்றதாக மேரி புகார். | | |
| 1133. | 28.4.2011 | **திருவள்ளூர் மாவட்டம்:** திருவள்ளூர் அடுத்த மம்பேட்டை சேர்ந்த தணிகைவேல்(25) மனைவி ஜெயலட்சுமி(23). கணவன் மற்றும் மாமியார் துன்புறுத்துவதாக ஜெயலட்சுமி புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (22.4.11) |
| 1134. | 28.4.2011 | **வேலூர் மாவட்டம்:** வேலூர் தந்தை பெரியார் பொறியியல் கல்லூரியில் வாக்குப்பதிவு இயந்திரம் வைக்கப்பட்டிருந்த அறை திறந்து கிடந்ததாக தகவல். தனிப்பிரிவு இன்ஸ்பெக்டர் அறிவழகனை விசாரிக்க சென்ற தினகரன் நிருபரை இன்ஸ்பெக்டர் மிரட்டியதாக இன்ஸ்பெக்டர் மீது நிருபர் புகார். | காவல் நிலையச் சித்திரவதை | பாஸ்கர் (23.4.11) |
| 1135. | 28.4.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** சோழவரம், நெடுவரம் பாக்கம் சத்திரம் பகுதியைச் சேர்ந்த திருப்பாலை காவல்நிலைய எஸ்.ஐ பிச்சைமுத்து(56) மனைவி ஜாய்நேசம்(49). அதே பகுதியைச் சேர்ந்த சாந்தி(50)யை பிச்சைமுத்து இரண்டாவது திருமணம் செய்ததோடு ஜாய்நேசம் வசித்த வீட்டை தனது பெயருக்கு எழுதி தரும்படி அடித்துத் துன்புறுத்தியதாக எஸ்.ஐ. பிச்சைமுத்து மீது ஜாய்நேசம் புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் (23.4.11) |
| 1136. | 28.4.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** சோழவரம் அருகே ஆத்தூரைச் சேர்ந்த சுரேஷ் மனைவி ஸ்ரீதேவி(36). சுரேஷின் நண்பன் புழல் ஏட்டு மோகன்(40). இரண்டு குழந்தைகள் உள்ள நிலையில் ஸ்ரீதேவியை மோகன் தன்னுடன் அழைத்துச் சென்றதைத் தட்டிகேட்ட சுரேஷ்யை ஆத்திரமடைந்த மோகன் தனது அடியாட்களுடன் தாக்கியதாக மோகன் மீது சுரேஷ் புகார். | காவல் நிலையச் சித்திரவதை | பாஸ்கர் (24.3.11) |
| 1137. | 28.4.2011 | **வேலூர் மாவட்டம்:** குடியாத்தம் அருகே பாக்கம் ஏரியில் தொடரும் மண் கொள்ளையால் நீராதாரம் பாதிக்கப்படுவதாக பொதுமக்கள் புகார். | மணல் கொள்ளை | பாஸ்கர் (25.4.11) |
| 1138. | 28.4.2011 | **வேலூர் மாவட்டம்:** ஜோலார்பேட்டை நாட்றம்பள்ளி ஒன்றியம் மல்லகுண்டால ஊராட்சிக்குட்பட்ட தாசியப்பனூர் கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளி மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது. 563 மாணவிகள் உள்பட 1,162 மாணவர்கள் படிக்கும் பள்ளியில் போதிய ஆசிரியர்கள் மற்றும் கட்டிட வசதி, ஆய்வுக்கூட வசதியின்றி | அடிப்படை வசதியின்மை | பாஸ்கர் (25.4.11) |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மாணவர்கள் மரத்தடியில் படிக்கும் அவலநிலை உள்ளதாக மக்கள் புகார். | | |
| 1139. | 28.4.2011 | **வேலூர் மாவட்டம்:** தங்கநல்லூர் 26வது தெரு, லட்சுமி அடுக்குமாடி குடியிருப்பில் வசித்தவர் ஜெயச்சந்திரன்(47) மவைி புவனேஸ்வரி(42) மகன் குருவிக்னேஷ்(17), தொழில் நஷ்டம் ஏற்பட்டு கடன் தொல்லையால் மனமுடைந்த ஜெயச்சந்திரன் குடும்பத்துடன் விஷம் குடித்தார். புவனேஸ்வரி மற்றும் ஜெயச்சந்திரன் மரணம். குருவிக்னேஷ் மருத்துவமனையில் சிகிச்சை. | கந்தவட்டிக் கொடுமை | பாஸ்கர் (25.4.11) |
| 1140. | 28.4.2011 | **வேலூர் மாவட்டம்:** பொன்னேரி திருஆயர் பாடியில் ஆதர்ஷ் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளியில் பள்ளி நிர்வாகம் மாணவர்களிடையே கூடுதல் கட்டணம், வசூலிப்பதாக புகார். தேர்வு முடிவு அறிவிக்கப்பட வேண்டும் என்றால் 5 மாத கல்வி கட்டணத்தை உடனே செலுத்தவேண்டும் என பள்ளி நிர்வாகம் கெடுபிடி செய்வதால் ஆத்திரமடைந்த பெற்றோர் பள்ளியை முற்றுகை. | கூடுதல் கல்வி கட்டணம் | பாஸ்கர் (26.4.11) |
| 1141. | 28.4.2011 | **வேலூர் மாவட்டம்:** பாடியநல்லூரைச் சேர்ந்த வக்கீல் பார்த்தசாரதி செங்குன்றம் காவல் நிலையம் சென்று இருதரப்பினரிடையே ஏற்பட்ட தகராறை விசாரித்தார். இன்ஸ்பெக்டர் சுப்பிரமணி வக்கீல் பார்த்தசாரதியை தரக்குறைவாக பேசியதோடு, துப்பாக்கியை காட்டி மிரட்டியதாக புகார். இன்ஸ்பெக்டர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என வக்கீல்கள் நீதிமன்றத்தை புறக்கணிப்பு. | காவல் நிலையச் சித்திரவதை | பாஸ்கர் (26.4.11) |
| 1142. | 28.4.2011 | **வேலூர் மாவட்டம்:** ஊத்துக்கோட்டை அருகே ஆட்ரம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த லேகநாகன் மகள் பவானி(16) பூண்டியில் உள்ள பள்ளியில் பிளஸ் 1 படிக்கும் மாணவி. பவானி வீட்டில் தூக்குப்போட்டுத் தற்கொலை. பவானியில் சாவில் மர்மம் இருப்பதாக அவரது தாய் மாமன் மேகவண்ணன் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் (26.4.11) |
| 1143. | 29.4.2011 | **மதுரை மாவட்டம்:** கொட்டாம்பட்டி அருகே உள்ள கருங்காலக்குடியில் 48மூடை ரேசன் அரிசி, 150 லிட்டர் மண்ணெண்ணெய், உளுந்தம்பருப்பு ஆகியவை அதிகாரிகளால் பறிமுதல். | ரேசன் அரிசி கடத்தல் | திக்கதிர் |
| 1144. | 29.4.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** ஆரணி அருகே உள்ள பெந்தவாக்கம் என்ற கிராமத்தில் நீலகிருஷ்ணராவ் | கொத்தடிமை தொழிலாளர்கள் மீட்பு | திக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செங்கல்சூளையில் 510 கொத்தடிமை தொழிளார்கள் அதிகாரிகளால் மீட்பு. நீலகிருஷ்ணராவ் கைது. | | |
| 1145. | 29.4.2011 | **நாமக்கல் மாவட்டம்:** நெல்லை மாவட்டம் சிவகிரி அருகே ராமநாதபுரத்தைச் சேர்ந்த வேலுச்சாமி மகள் அனிதா(19) நாமக்கல்லில் பொறியியல் கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வந்தார். வேலுச்சாமி அனிதாவுடன் மதுரை வந்தபோது கழிப்பறைக்குச் சென்ற அனிதாவை காணவில்லை என வேலுச்சாமி புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 1146. | 29.4.2011 | **கடலூர் மாவட்டம்:** கூடலுர் அருகே வசித்த கேரள மாநிலம் குமுளி ஆனவிலாசம் பகுதியைச் சேர்ந்த கண்ணன் மனைவி சரண்யா(22). கணவன் மனைவி தகராறில் ஆத்திரமடைந்த கண்ணன் மனைவி மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்ததால் சரண்யா மரணம். கண்ணன் கைது. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினகரன் |
| 1147. | 29.4.2011 | **தூத்துக்குடி மாவட்டம்:** சாத்தான்குளம் அடுத்த விஜயராமபுரத்தைச் சேர்ந்த நடராஜன் மகன் ரவி(45) பட்டாசு பட்டறை வைத்திருந்தார். பட்டாசு தயாரிக்க மருந்துப் பொருளை இடித்துக் கொண்டிருந்த போது ஏற்பட்ட தீ விபத்தில் முருகன், ஜோசப் , எபநேசர் மூவர் மரணம். | பட்டாசு ஆலை தீ விபத்து | தினமலர் |
| 1148. | 29.4.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரையில் தொடரும் கார்பைடு கல்லால் பழுக்க வைக்கும் மாம்பழங்களை கைப்பற்றும் வேட்டையில் ஆறு 6 டன் விஷ மாம்பழம் பறிமுதல். | சுகாதாரக்கேடு | தினமலர் |
| 1149. | 29.4.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை சுப்பிரமணியபுரம் காவல் நிலையத்தில் சிறப்பு எஸ்.ஐ. ஜெயராஜ்(59). திருட்டு வழக்கில் புகார் ஏதும் பதிவு செய்யாமல் இருக்க ஜெயராஜ் ரூ.1500 லஞ்சம் கேட்டதாக மணிகண்டன் புகார். ஜெயராஜ் கைது. | லஞ்சம் | தினமலர் |
| 1150. | 29.4.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை சிம்மக்கல் பகுதியில் வசிக்கும் ராஜா, ராஜேஸ்வரி மகன் விஜய். குடும்பத்துடன் சாத்தூரில் சாமி தரிசனம் முடிந்து திரும்பு வழியில் பெற்றோரை தவறவிட்டதாக கள்ளிக்குடி காவல்நிலையத்தில் இரண்டு நாட்களாக சிறுவன் விஜய் தவிப்பு. | குழந்தைகள் மீதான வன்முறை | தினமலர் |
| 1151. | 29.4.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** சித்தரேவு ஊத்துவாய்க்கால் பாப்பான் ஓடையில் உள்ள புதர் ஒன்றில் பிறந்து 3 நாட்களே ஆன நிலையில் ஆண் குழந்தை இறந்து கிடந்ததாக பொதுமக்கள் புகார். | சிசுக்கள் மீதான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 1152. | 29.4.2011 | **தேனி மாவட்டம்:** தாமரைக்குளம் வ.உ.சி. தெருவைச் சேர்ந்த திருப்பதி(35) தேனியிலிருந்து பெரியகுளம் செல்லும் பேருந்தில் பயணிக்கும் போது உடன் பயணித்த காவலருக்கும் திருப்பதிக்கும் தகராறு. காவலர் அடிக்கு பயந்த திருப்பதி ஓடும் பேருந்தில் இருந்து குதித்த போது மரணம். | காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 1153. | 29.4.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னையில் இருந்து அபுதாபி நாட்டிற்கு வேலைக்கு சென்ற சென்னை இளைஞர்கள் அங்கு சரியான சாப்பாடு இல்லாமல் சம்பளம் கொடுக்கப்படாமல் துன்புறுத்தப்பட்டதாக இளைஞர்கள் புகார். அங்கு சிக்கித் தவிக்கும் இளைஞர்களை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை. | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 1154. | 29.4.2011 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரம் அருகே மேல அனுப்பானடி ஹவுசிங் போர்டு காலனியைச் சேர்ந்த மாயா மனைவி லோகமணி(40) மகன் அருண்பாண்டி. ஒட்டல் வேலை முடித்து இரவு திரும்பும் போது 25 வயது மதிக்கத்தக்க சில வாலிபர்கள் அருண்பாண்டியின் இருசக்கர வாகனத்தை மறித்த லோகமணியிடம் இருந்து நகைகளை பறித்துச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 1155. | 29.4.2011 | **வேலூர் மாவட்டம்:** அரக்கோணம் தாலுகா, சுவள்பேட்டை ராஜாஜி தெருவில் வசிக்கும் அன்புமணி மனைவி வைஜெயந்திமலா. கணவர் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தவதாக வைஜெயந்திமலா புகார். | பெண்கள் மீதான வன்முறை & வரதட்சணைக் கொடுமை | பாஸ்கர் |
| 1156. | 30.4.2011 | **மதுரை மாவட்டம்:** முறையாக நடத்தும் அடகு கடைகளில் காவலர்கள் சோதனை என்ற பெயரில் தொந்தரவு தருவதாகவும், பொய் வழக்கு பதிவு செய்த காவலர்கள்கித்திரவதை செய்து மிரட்டல். கோர்ட்ட விசாரணைக்கு உத்தரவு. | காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 1157. | 30.4.2011 | **சிவகங்கை மாவட்டம்:** காரைக்குடி சுப்பிரமணியாபுரம் ஆறாவது தெருவைச் சேர்ந்த அம்பலம் மனைவி புஷ்பவல்லி(46). இரண்டு சக்கர வாகனத்தில் வந்த நான்கு நபர்கள் திருமண பத்திரிகை கொடுப்பதற்காக வந்த உறவினர்கள் என கூறி புஷ்பவல்லியை கட்டிப்போட்டு 18 பவுன் நகை. மற்றும் 80 ஆயிரம் பணத்தை கொள்ளையடித்துச் சென்றதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 1158. | 30.4.2011 | **மதுரை மாவட்டம்:** எஸ்.எஸ்.காலனி அவென்யூ தெருவைச் சேர்ந்த கொத்தனார் ஜெயப்பிரகாசம் மகள் துர்க்காதேவி(18). பெற்றோர் திட்டியதால் மனமடைந்த துர்க்காதேவி தூக்கிட்டுத் தற்கொலை. | குழந்தைகள் மீதான வன்முறை & தற்கொலை | தினமலர் |
| 1159. | 30.4.2011 | **மதுரை மாவட்டம்:** சம்மட்டியபுரத்தைச் சேர்ந்த நாகேந்திரன் மனைவி நவநீதம்(38). கணவன் மனைவி கருத்துவேறுபாடு காரணமாக மனமுடைந்த நவநீதத்தை காணவில்லை என புகார். | பெண்கள் மீதான வன்முறை | தினமலர் |
| 1160. | 30.4.2011 | **புதச்சேரி மாநிலம்ம்:** புதுச்சேரி , மேட்டுப்பாளையம் தர்மபுரி பகுதியைச் சேர்ந்த ராமசாமி மகள் ஓவியா(16). அதே பகுதியைச் சேர்ந்த கார்த்திக்(20). கம்யூட்டர் சென்டருக்கு தனியாக சென்ற ஓவியாவை கார்த்திக் மற்றும் நண்பர்க கடத்திச் சென்ற பாலியல். கார்த்திக் மற்றும் நண்பர்கள் கைது. | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |
| 1161. | 30.4.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** திண்டுக்கல் வடமதுரை அருகே அய்யலூர் பேரூராட்சியில் கிணத்துப்பட்டி பாலாதோட்டம் மக்கள் மாயன பாதையாகவும் கிராமத்தினர் பொது பாதையாகவும் பயன்படுத்தி வந்தனர். இந்த பாதையை கிணத்தபட்டி அய்யாசாமி தனது நிலத்தில் வருவதாக வழியை அடைத்தார். இருதரப்பினரும் புகார். இன்ஸ்பெக்டர் ராஜமரளி அய்யாசாமிக்கு ஆதரவாக செயல்பட்டதாக கிராம மக்கள் இன்ஸ்பெக்டரையும் அவரது வாகனத்தையும் சிறைபிடித்தனர். | காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 1162. | 30.4.2011 | **சேலம் மாவட்டம்:** வெண்ணந்தூர் பகுதியைச் சேர்ந்த சினிவாசன்(60) முள்ளுக்குறிச்சி அருகே நிலம் வாங்கினார். தனது நிலத்தை பத்திர பதிவு செய்ய தம்மப்பட்டி பத்திர பதிவு அலுவலகத்தில் அணுகினார். கூடுதல் முத்திரை கட்டணமாக செலுத்தாமல் இருக்க துணை ஆட்சியர் பொன்னுசாமி, மற்றும் பெண் பி.டி.ஓ. ரேணுகா ரூபாய் 8,000 லஞ்சம் கேட்டதாக புகார். இருவரும் கைது. | லஞ்சம் | தினமலர் |
| 1163. | 30.4.2011 | **புதுக்கோட்டை மாவட்டம்:** புதுநகர் 4வது தெருவைச் சேர்ந்த மணிகண்டன். அதே பகுதியைச் சேர்ந்த சமீம்மரியம் இருவரும் பெற்றேர் எதிர்ப்பை மீறி திருமணம் செய்தனர். திருமணம் செய்த இருவரையும் பெற்றோர்கள் பொய் புகார் கொடுத்து பிரிக்க முயல்வதாக காதல் ஜோடி மதுரை உயர்நீதி மன்றத்தில் வழக்கு. | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| 1164. | 30.4.2011 | **கோவை மாவட்டம்:** கோவை சுப்பரமணியபுரம் கவுண்டர் பகுதியில் வசிக்கும் போக்குவரத்துப் பிரிவுக் காவலர் ஜெயகுமார் 2009ல் PN பாளையத்தைச் சேர்ந்த துர்காவை திருமணம் செய்ததை மறைத்து இரண்டாவது திருமணம் செய்துள்ளதாக ஜெயகுமார் மீது புகார். ஜெயகுமார் கைது. | பெண்கள் மீதான வன்முறை | டெக்கான் கிரானிக்கல் |
| 1165. | 30.4.2011 | **விருதுநகர் மாவட்டம்:** வத்திரயிருப்பு அருகேயுள்ள கரிசல்குளம் குருசாமி மகன் பாண்டி(52). இவர் சத்துணவு கூடம் கட்ட ஒப்பந்தம். ஒப்பந்தம் நிறைவடையும் தருவாயில் ,ஊராட்சி ஒன்றிய ஆணையர் ரேணுகாவிடம் காசோலை கேட்டுள்ளார். காசோலை வழங்க ரூ. 1,500 லஞ்சம் கேட்டதாக ரேணுகா மீது பாண்டி புகார். ரேணுகா கைது. | லஞ்சம் | தினமணி |
| 1166. | 30.4.2011 | **திருச்சி மாவட்டம்:** திருட்டு வழக்கில் கைதாகி திருச்சி சிறையில் விசாரணை கைதியாக உள்ள நாடிமுத்து. டியூப் லைட்டை கழற்றி வாயில் போட்டு மென்றதால் காயம். மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல அறை கதவை திறந்துவிடுவதில் எற்பட்ட காலதாமதத்தால் வார்டன் மற்றும் கைதிகள் இடையே மோதல். | சிறைச்சாலை வன்முறை | தமிழ்சுடர் |
| 1167. | 30.4.2011 | **சிவகங்கை மாவட்டம்:** பாலக்குறிச்சி கிராமத்தில் மாரியம்மன் கோவில் திருவிழாவில் தலித் மற்றும் ஆதிக்கச் சாதியினர் இடையே ஏற்பட்ட தகராறில் அதிக்கச் சாதியினர் தலித் இளைஞரை கட்டிப்போட்டு அடித்துச் சித்திரவதை. இன்றும் இக்கிராமத்தில் இரட்டை டம்ளர் முறை கடைபிடிப்பு. | தலித்துகள் மீதான வன்முறை | திக்கதிர் |
| 1168. | 30.4.2011 | **தர்மபுரி மாவட்டம்:** தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர் குமார். அதே பகுதியைச் சேர்ந்த தலித் சமூகத்தைச் சேர்ந்த உமாவைக் காதலித்துத் திருமணம். ஆதிக்க சமூகத்தினர் சித்திரவதை செய்வதாக குமார் புகார். காவலர்கள் நடவடிக்கை எடுக்க மறுப்பு. | தலித்துகள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை | திக்கதிர் |
| 1169. | 30.4.2011 | **கரூர் மாவட்டம்:** தோட்டக்குறிச்சி கிராமத்தில் உள்ள மூர்த்தி பாளையத்தில் அருந்ததிய மக்களின் குலதெய்வமான மதுரைவீரன் கோவிலில் நடைபெற்ற திருவிழாவில் ஆதிக்கச் சாதியினர் புகுந்து தலித்தகள் மீது தாக்குதல் நடத்தியதாக புகார். | தலித்துகள் மீதான வன்முறை | ஜனசக்தி |